உ

[illegible]

திருவள்ளுவர் கழக வெளியீடு-2

சி. அ. இரகுநாதன், தாரமங்கலம்

குழந்தையும் தெய்வமும்

கழகத்தின் முதல் வெளியீட்டில் உலகத்திலே மக்களாய்ப் பிறந்தோர் வாழவேண்டிய வழியறிந்து வாழவேண்டும். அவ்வழிக்கு அறவாழ்க்கை என்று பெயர். அறம் இரண்டு வகைப்படும். இல்லறம் துறவறம் இரு வழிகளிலும் மனதிலே குற்றமிருத்தல் ஆகாது. துறவறம் பிறரால் பழிக்கப்படாமல் நடத்தப்பட்டால் நல்லதே எனக் கூறப்பட்டது. துறவறம் ஏன் பழிக்கப்படும் எனின்?

"மழித்தலும் நீட்டலும் வேண்டா உலகம்
பழிப்ப தொழித்துவிடின்"

என்று கூறப்பட்டிருக்கிறது. மழித்தல் என்பது தலை மயிரை மழுங்க மொட்டையடித்துவிடல். நீட்டல் என்பது தலை மயிரை நீளவளரவிடல். மொட்டையடிப்பதும், சடைமுடி தரிப்பதும் துறவிகளின் அடையாளம். உலகம் பழிக்கும் குற்றங்கள் என்னிடம் இல்லை என்பதற்கு அறிகுறி. உலகம் பழிக்கும் செயல்களை ஒழித்த ஒருவன் தன் தலைமயிரை மழிக்கவோ, நீட்டவோ வேண்டுவதில்லை. மனக்குற்றம் நீங்கினால் போதும். அவரவர் இஷ்டப்படி குடுமி வைத்துக்கொள்ளலாம். முழு மொட்டையும் வேண்டாம். [illegible] [illegible] வேண்டாம். எப்படியிருந்தாலும் மனக்குற்றம் நீங்கவேண்டும்.

"தலையில் இழிந்த மயிரனையர் மாந்தர் தம்
நிலையில் இழிந்தக் கடை"

மனிதன் தன் பெருமைக்கு ஏற்ப வாழவேண்டிய நிலையை விட்டு உலகம் பழிக்கும் முறையில் நடந்தால் அவன் [illegible] [illegible] தலை மயிருக்கு ஒப்பாவான். [illegible]

பட்ட தலை மயிர் குப்பையிலே சேர்ந்து பொசுக்கப்படுவதுபோல அவன் வாழ்க்கை நிலை சாய்ந்துவிடும். உலகம் பழிக்கும் குற்றம் எவை?

"காமம் வெகுளி மயக்கம் அம்மூன்றின்
நாமம் கெடக் கெடும் நோய்"

காமம் என்பது தன் மனைவி தவிர பிற பெண்களிடத்துக் கொள்ளும் ஆசை. வெகுளி என்பது கோபம். மயக்கம் என்பது உண்மையல்லாதவைகளை உண்மை எனக் கொள்ளுதல். இம் மூன்றின் பெயரும் தெரியாமல் அழித்துவிடவேண்டும். இந்த மூன்று குற்றங்களும் நீங்கினால் பிறப்பாகிய நோய் நீங்கும். முத்திப் பேறு கிடைக்கும். இம்மூன்று குற்றங்கள் உள்ளவரை உலகம் பழிக்கும். இக்குற்றங்களை நீக்க இல்லறமும் சாலச்சிறந்தது: ஆகையால்

"மங்கலம் என்ப மனைமாட்சி மற்றதன்
நன்கலன் நன்மக்கட் பேறு"

ஒருவனுக்கு தன் மனைவியின் நற்குண நற்செய்கைகளே நன்மை தருவதாகும். நல்ல குழந்தைகளைப் பெறுதலே அந்நன்மைக்கு நல்ல ஆபரணமாம். இல் வாழ்க்கையில் துணையாயிருப்பவள் மனைவி அம்மனைவியைத்தான் "வாழ்க்கைத்துணை நலம்" என்றார். நலம் என்பது நன்மை அல்லது அழகு. ஒருவனது வாழ்க்கைக்குத் துணையாயிருக்கும் அழகே மனைவி. அவ்விருவர்க்கும் தோன்றும் நல்ல குழந்தைகளே சிறந்த ஆபரணம். ஒருவன் கோடி !கோடியாகப் பொருள்களைத் தேடிக்குவிக்கலாம். வாழ்க்கைத்துணையாயிருக்கும் மனைவி அவைகளை ஏற்றவாறு பாதுகாக்கவேண்டும். வரும்படிக்குத் தககவாறு செலவு செய்யவேண்டும். வீட்டில் உள்ளவருக்கும் மற்றும் விருந்தாளிகளுக்கும் முகம் கோணாமல் பணிவிடை செய்யவேண்டும். கணவன் விருப்பமறிந்து செய்யவேண்டும். உடலில் உயிர் இருந்து வாழச் செய்பவள் அல்லவா?

இரண்டு உடல்களுக்கும் ஒரு உயிராக இருத்தல்வேண்டும். கணவன் சொல்லை மனைவி தட்டக்கூடாது. மனைவி சொல்லை கணவன் மீறக்கூடாது. இருவரும் ஒரு மனப்பட்டால் வாய்ப் பேச்சுக்கு இடமில்லை. குறிப்பறிந்து செய்யவேண்டும். இப்படிப் பட்ட பெருமைக்குரிய மனைவியே வீட்டுக்கு மங்கலம். குழந்தையே ஆபரணம்.

"பெறுமவற்றுள் யாமறிவதில்லை அறிவறிந்த
மக்கட்பே றல்ல பிற"

இவ்வுலகத்திலே பணத்தை நிறையத்தேடுகிறோம். நிலங்கள் நிறையத் தேடிவைக்கிறோம். நிறைய நகைகள் செய்துவைக்கிறோம். இவைகளில் எல்லாம் ஒரு அளவும் சந்தோஷமும் இருப்பதில்லை. மேலும் மேலும் ஆசையும் தேடுவதில் வருத்தமும் காப்பாற்றுவதில் வருத்தமும் இழப்பதில் வருத்தமும்தான் உண்டாகிறது. ஏன் இப்படி யாருக்காக வருந்தி வருந்திச்சேர்க்கிறோம். பின்னால் வருபவர்களுக்கல்லவா? ஆகையால் இச்செல்வங்களை எல்லாம் தனக்கு என அடையும் உரிமை பெற்ற மக்கள்தான் மற்றெல்லாச் செல்வங்களிலும் சிறந்த செல்வம். தேடிய செல்வத்தை ஒழுங்கான முறையிலே பாதுகாக்கவும் மேலும் வளர்க்கவும் வேண்டிய அறிவு படைத்த குழந்தையே வேண்டும்.

"தென்புலத்தார் தெய்வம் விருந்து ஒக்கல்தான்
என்றாங்கு
ஐம்புலத் தாறோம்பல் தலை"

மக்களாய்ப் பிறந்தோர் முன்னோர் தேடிய பொருளை வீண் செலவு செய்யாமல் காப்பாற்றவேண்டும். நல்ல வழியில் மேலும் சம்பாதித்து விருத்தி செய்யவேண்டும். சம்பாதித்த பொருளை ஐந்து வகையில் பங்கிட்டுச்செலவு செய்யவேண்டும். ஐந்து விதம் என்ன? இறந்தோரை நினைத்துச் செய்யும் கடன். தெய்வத்தை நினைத்துச் செய்யும் கடன். புதியதாக வந்த விருந்தினர்களுக்கு

மறத்தல்; தன் உடலுக்கு வேண்டுவன செய்தல். இவைகளை அறிந்து செய்யத்தக்க மக்கள் வேண்டும். ஆகையால் இயல்பாகவே பகுத்தறிந்த மக்கள் என்றது ஆண் மகனைக் குறிக்கும். பெண் மக்கள் கூடவே தன்மையை எளிதில் உணரவல்லவர்கள். அறக்கடமைகளை அறியச் சிறந்த அறநெறி பசிப்பிணி நீக்கல், உயிர் உடலில் நிலை பெறச்செயல். இச்செயல் பெண் பாலார்க்கு இயல்பாகப் பொருந்தியது. இவ்வறத்தைச்செய்ய இயலாமல் பொருளைத்தேடி அலைந்து விழிக்கும் ஆண் மக்களுக்குத் துணையாக வாழ்க்கை நடத்து வது பெண்மைத் தெய்வம்.

"தற்காத்துத் தற்கொண்டாற் பேணித்தகைசான்ற
சொற்காத்துச் சோர்விலாள் பெண்"

தன்னையும் காத்துக்கொண்டு தன்னைமணந்த கணவனைக் காப்பாற்ற மேன்மையிய ஆற்றும் கடமைகளைத் தவறாது செய்து புகழைக்காத்துச் சோர்வில்லாதவள் பெண். தன்னைக் காத்தல், தன் கணவனைக் காத்தல், குடிக்கு உரிய புகழைக் காத்தல் இவ் வெல்லாவற்றினும் உயிர் உடலினின்றும் நீங்காது காத்தல் ஆகா வது பசிப்பிணி நீக்கல் இதனை எளிதில் அறியாதது ஆண், மக்களுள் அறிந்த மக்கள் வேண்டும்.

"எழு பிறப்பும் தீயவை தீண்டா பழிபிறங்கா
பண்புடை மக்கட் பெறின்"

பழிக்கப்படாத நற்குணங்களையுடைய மக்களைப் பெறுவாரா யின், தேவர், மனிதர், விலங்கு, பறவை, ஊர்வன, நீர் வாழ்வன, தாவரம், என்பனவாகிய எழுவகையான பிறப்புக்களிலும் துன்பங் கள் அவனைச் சென்று அடையமாட்டா. முதல் குறளில் அறிவறிந்த மக்கள் என்றது ஆண் மக்களைக் குறித்ததுபோல இக்குறளில் "பண்புடை மக்கட் பெறின்" என்றது பெண் மக்களைக் குறித்தது. எப்படி எனின்,

"அன்பும் அறனுமுடைத்தாயினில் வாழ்க்கை
பண்பும் பயனும் மது"

என்ற குறளில் அன்பும் அறனும் பண்பும் பயனும் என்றார். அன்பு என்றது தன் மனைவியிடத்து அன்பும், அறனும் என்றது பிறர்க்குப் பகுத்துண்ணும் அறனும், பண்பும் என்பது. இல்

வாழ்க்கைக் குணமும், பயனும் என்றது இல்வாழ்க்கையின பிரயோசனமும் ஆகும். இதில் பண்பு என்ற சொல் இயல்பாக உயிர்க்குவேண்டிய உணவ ஊட்டி உடலில் நிலைபெற நிறுத்தும் மனைவியைக் குறிக்கும். ஆகையால் "பண்புடை மக்கள் பெறின்" என்றது அவ்வன்பு செலுத்தற்குரிய பெண்மக்களைப் பெறின் என விளங்கும். அத்தகைய பெண்களைப் பெற்றால் ஒழுங்காக உயிர் ஓம்புவர். எழு பிறப்பிலும் தீயவை தீண்டா. மக்கட் செல்வம் என்றதால் செல்வத்தைத் தமக்கும் வைத்துக்கொண்டு பிறர்க்கும் உதவுவதுபோல் இம் மக்கட் செல்வத்திலே தன் குலத்திற் குரியவன் ஆண்மகன். பிறர் குடிக்கு உதவக்கூடியவள் பெண்மகள். எல்லா தானத்திலும் சிறந்தது கன்னிகாதானமல்லவா? கை துணி, மணி, பூமி முதலிய சீதனங்களோடு பிறருக்கு அளிக்கப்படும் செல்வமல்லவா? அகையால் ஒருவன் தன் குடிப்பெயர் நிறுத்த ஒரு ஆண், தன் குலம் பிற இடங்களில் விளக்கமுற ஒரு பெண் பெறுதல் என்பது விளங்குகிறது. பிறந்த குடியையும் புகுந்த குடியையும் விளக்கச் செய்பவளால்லவா பெண். இதுதான அன்பும், அறனும், பண்பும், பயனும், ஆணும், பெண்ணும், அறமும், இன்பமும்.

"தம் பொருள் என்பதம் மக்கள் அவர் பொருள் தந்தம்
வினையான் வரும்"

தம்முடைய மக்களைத் தங்களுடைய பொருள் என்று சொல்லுவர் அறிந்தோர் அந்த மக்கள் சம்பாதித்த பொருள் தம்மைக்குறித்து அவர் செய்த நல்வினையாலேவரும். அறிவறிந்த ஆண்மக்களும்

பண்புடைய பெண்களும் தம் பொருள் என்று சொல்லுவர் தம் குடியிலே அறிவறிந்த ஆண்மகன் தன் முன்னோராகக் குறித்துச் செய்யும வினையும் பண்புடைய பெணமககள் தான் புகுந்த குடியிலே தகதையின் குடிப்பெயரைக குறிததுச்செய்யும் வினைகளும் தன்னைச் சார்ந்து வரும். இம் மூன்று குறள்களில் முதல் குறள் அறிவறிந்த ஆண் மகனை இரணடாவது பண்புடைய பெண்மகளை, மூன்றாவது தம் மககள் என்று பொதுப்படக் கூறி அவர் பொருள் என்று, ஆண் மகனும பெண் மகளும் அவரவர் குடியிலே தந்தம் குடிப்பெயர் அழியாதவாறு நல்வினை தீவினைகளைச் செய்வது அக்குடியில் இன்னார் மகன இன்னார் மகள் என்று தன்னையே சாருவதும் விளங்குகிறதல்லவா் தமபொருள் என்பதும் தந்தையும் தாயுமாகிற தங்களது பொருள் என்பதும் தெளிவாகிறது.

“அமிழ்தினும் ஆற்ற இனிதே தம் மக்கள்
சிறுகையளாவிய கூழ்”

முன் கூறிய இருவகைச் சிறப்பும் பொருந்திய தம்முடைய மக்களது சிறிய கையினாலே அளையப்பட்ட சோறானது மிகுந்தருசியுடைய அமிர்தத்தைவிட மிகவும் இனிமையானது. தாம் சாப்பிடும் போது பக்கத்திலே இருந்து சின்னஞ்சிறிய கைகளாலே நாம் உண்ணும் உணவைத் துழாவுதலும் அப்படித் துழாவிய உணவை நாம் உண்ணலும் பெருங் களிப்பை உண்டாககும். இதை அனுபவித்தவர் அறிவர். மக்களே தங்கள் சிறந்த செல்வம் எனக் கொண்டு வாழ்பவர் மக்களைவிட்டுத் தனித்து உண்ணமாட்டார்கள் அம்மக்கள் தம் கையால் துழாவுவதிலும் நாம் அதை உண்ணுவதிலும் சிறந்த உண்மைகள் இருக்கின்றன. சிறுத்தொண்டர் கதையிலும் அப் பூதியடிகள் கதையிலும், சாப்பிடும்போது 'உன் மக்களைக் கூப்பிடு' என வருவனதக் காண்க. குழந்தைகள் பிறந்தபிறகு நமது வாய் ருசியைத் தேடக்கூடாது, ருசியுள்ள நல்ல பதார்த்தங்கள் எல்லாம் குழந்தைகளுக்கு என்று ஒதுக்கிவைக்கவேண்டும் நம்பியாண்டார் நம்பி, சிவபெருமானுக்கு சாதம் படைப்பதையும் [illegible]

தம் வாயிலே அதுக்கிப்பார்த்து தேன்கலந்த மாமிசத்தைச் சிவபெருமானுக்கு ஊட்டியதும் கவனித்துப் பாருங்கள். கண்ணப்பர் கூறுகிறார்:

கொழுவிய தசைகள் எல்லாம்
கோலினில் தெரிந்து கோத்தங்கு
அழலுறு பதத்தில் காய்ச்சிப்
பல்லினால் அதுக்கி நாவில்
பழகிய இனிமை பார்த்துப்
பதத்தில் இவ்விறைச்சி சால
அழகிது நாயனீரே
அமுது செய்தருளும் என்றார்.

ஊனமுது கல்லையுடன்
வைத்து இது முன்னையின் நன்றால்
ஏனமொடு மான்கலைகள் மரை
கடமை இவை இவற்றில்
ஆன உறுப்பு இறைச்சி அமுது
அடியேனும் சுவை கண்டேன்
தேனுமுடன் கலந்தது இது
தித்திக்கும் என மொழிந்தார்.

கண்ணப்பனார் குழந்தை. சிவபெருமான் தந்தை. முதலாகக் கொழுத்த தசைகளைப் பொருத்தி கோலில் கோத்தார். நெருப்பிலே பதமாகக் காய்ச்சினார். தம்பல்லிலே அதுக்கிப் பதம் பார்த்தார். மிகவும் நன்றாயிருக்கிறது. தந்தையாரே உண்ணும் என அன்போடு வேண்டுகிறார். அதுதான் முன்னையினும் நல்லது இது. பலவகை உறுப்பு இறைச்சி அடியேனும் சுவைகண்டேன். தேனும் உடன் கலந்தது. இது தித்திக்கும் எனச்சொன்னார். குழந்தையின் அன்புமொழியும் கண்ணப்பரிடத்தில் பாருங்கள். [illegible]

பேசுகிறார். குழந்தை அன்போடு தத்தித் தத்தி வந்து சள்வாய் கலந்து தன் வாயில் இருப்பதைத் தன் கையிலே எடுத்து அன்பன் வாயிலும் அம்மை வாயிலும் திணிப்பதையும் முகத்தோடு முகம் வைத்துக் கொஞ்சுவதையும் நினைத்துக்கொள்ளுங்கள். சிவபெருமான் தமது குழந்தையின் அன்பை சிவகோசரியாருக்கு எப்படிக் காட்டினார் என்பதையும் எண்ணிப் பாருங்கள். உலகத்திற்கு ஒப்பற்ற தந்தையாகிய ஒரு பெருந்தெய்வத்தனிடம் பேரன்புகொள்ளவும் தமக்குச் சிறந்த பிரியமானவற்றை எல்லாம் கடவுளுக்கு எனக் கொடுக்கும் சிறந்த புகழையும் குழந்தையிடத்தில் கொள்ளும் அன்பினால் கற்றுக்கொள்ளுகிறோம். மறம் மிகுந்துவரும் இக்காலத்தில் குழந்தைகளைச் சாக்குப் போக்குச் சொல்லி வெளியேற்றிவிட்டுக் கதவைத் தாளிட்டுக்கொண்டு தனித்துத் தன் வயறு கொழுக்க உண்ணும் தாய்மாரையும் தகப்பன் மாரையும் எண்ணிப் பாருங்கள் தகப்பன் வீதியிலே காதடைத்துக் கிடக்க மகன் உள்ளே எண்ண விசாரமில்லாமல் தின்பதையும் எண்ணிப்பாருங்கள். தகப்பன் தாயிடத்தில் குழந்தைக்கும் குழந்தையிடத்தில்தாய்தந்தைக்கும் ஏற்படும் அன்பே முத்திப்பேறடைய முதல் காரணம். தன் வீட்டிலே மனைவி யும் மககளும் கூழுக்கலைய தான் மட்டும் நவீன முறையில் வெளியே போய் தீனி தின்னுபவர்களும் யோசித்துப் பாருங்கள். தன் மனைவி மக்கள் தகப்பன் என்றதன்னைச் சார்ந்தவர்களிடம் அன்பு வளராமல் பிறரிடத்திலும் பிற உயிர்களிடத்திலும் நிலைத்த அன்பு எப்படி உண்டாகும். போலி அன்பாகத்தான் இருக்கமுடியும்.

மக்கள் மெய்தீண்டல் உடற்கின்பம் மற்றவர்
சொற்கேட்டல் இன்பஞ் செவிக்கு"

ஒருவனது உடம்புக்குத்தன் மக்களது உடம்பைத்தீண்டுதல் இன்பம். அந்த மக்களது சொற்களைக் கேட்பது காதுக்கு இன்பந் தரும். இதில் சொல் என்பது குழந்தைப் பருவத்திலே பேசும் மழலைச் சொல் மாத்திரமன்று. தம் மக்கள் காளைப்பருவத்திலே பேசுகின்ற கற்றறிந்த சொல்லைக்கேட்கவும் இன்பந்தரும். வெய்யிலில்

சுற்றித்திரிந்துவிட்டு களைப்போடு வீட்டுக்கு வந்ததும் அப்பா அம்மா என்ற மழலைச் சொல்லோடு தத்தித்தத்தி வரும் குழந்தையை எடுத்து மார்போடு அணைத்துக்கொண்டால் களைப்பு நீங்குமாம்.

"குழலினிது யாழினிது என்ப தம் மக்கள்
மழலைச் சொல் கேளாதவர்"

மேலேகூறிய இருபருவத்துச் சொற்களிலும் தங்கள் மக்களது குழந்தைப் பருவத்து மழலைச் சொற்களைக் கேளாதவர்கள்தான் புல்லாங்குழலது இசையும், வீணையினது இசையும் இனியது என்று சொல்வார் முதலில் மக்கள் கையில் துளாவிய கூழ் வாய்க்கு இன்பம். அவர் மெய் தீண்டல் உடற்கு இன்பம். அவர்கள் மழலைப் பேச்சு காதுக்கு இன்பம். தினந்தோறும் அவர்களைப் பார்ப்பதே கண்ணுக்கு இன்பம். எடுக்கும்போது உச்சிமுகர்வதே மூக்குக்கு இன்பம்.' இப்படி மெய்வாய்கண் மூக்குச் செவியென ஐந்துக்கும் இன்பம் கொடுக்கின்றது. இதையறிந்து குழந்தையிடத்தில் அன்பு செலுத்தினால் மெய் வாய் கண் மூக்குச் செவி என்ற ஐந்தினாலும் வரும் ஆசைகளை அடக்கலாம். ஐம்பொறிகளின் ஆசையை அடக்குவதுதான் துறவுக்கு அடிப்படையானது. இந்த ஐந்து புலன்களையும் தன் வழி இழுத்துக் கொள்ளுகிற தெய்விக சக்தி குழந்தையிடம் இருக்கிறது சுருக்கச் சொன்னால் குழந்தை விருப்பு வெறுப்பற்றது. நன்மை தீமை அறியாதது, தெய்வ ஒளி உள்ளது. ஒரு மனத்துடையது நமது பழக்க வழக்கத்தில் இரண்டுபடுத்தி நம் வழிக்கு இழுக்கிறோம் குழந்தை தன் கால் கைகளை நீட்டி நீட்டி அழுவதை உற்றுப்பாருங்கள். அப்பா நான் பிறந்துவிட்டேன். நீ என் இன்னும் போராசை கொண்டு அலைகிறாய். உனது ஆசையாகிய மாயையை நான் கொஞ்சங் கொஞ்சமாக எடுத்துக்கொள்ளுகிறேன். என்னைப்போல் பரிசுத்த மான எண்ணத்தை இன்று முதல் கொஞ்சங் கொஞ்சமாக வளரச் செய்து ஞானமடைய வழி தேடு என நம்மைப் பார்த்துப்பார்த்து அழுகிறது. இப்படி ஆசையை அழிக்கக் கோபத்தை நீக்கி மயக்

கத்தைப் போக்கும் குழந்தை தெய்வமல்லவா? ஆகையால்தான் "குழந்தையும் தெய்வமும் கொண்டாடுமிடத்தில்" என்றார்.

"தந்தை மகற்காற்று நன்றி அவையத்து
முந்தியிருப்பச்செயல்"

தகப்பன் தன் மகனுக்குச் செய்யவேண்டிய உதவி என்ன எனில் கற்றவர் கூடியிருக்கும் சபையில் தன் மகன் முதன்மையாயிருக்கும்படி செய்யவேண்டும். குழந்தை தகப்பனுக்கு ஐம் பொறியவிக்க உதவியிருக்கிறது தகப்பன் செய்வது அதற்குப் பிரதியுபகாரம் தான் இதைத்தவறாமல் செய்யவேண்டாமா?

"தம்மில் தம்மக்கள் அறிவுடைமை மாநிலத்து
மன்னுயிர்க் கெல்லாம் இனிது"

தம் மக்களது அறிவுடைமையானது இந்தப் பெரிய நிலத்தில் நிலைத்து நிற்கிற உயிர்களுக்கெல்லாம் தம்மைவிடப் பன்மடங்கு இனிமையைத் தருவதாயிருக்கும், இதில் தம்மில் தம் மக்கள் என்றதனால் தங்களைவிடத் தங்கள் மக்கள் என்பது விளங்கும். தாயும் தந்தையும், அறிவறிந்த ஆண் மகனையும் பண்புடைய பெண் மகளையும் அவர்கள் தங்களைவிட பிறந்த குடியிலும் புகுந்த குடியிலும் அறிவுடையவர்களாயிருப்பது, உலகத்தில் உள்ள பிற உயிர்களுக்கெல்லாம் இனிது.

"ஈன்றபொழுதில் பெரிதுவக்கும் தன் மகனை
சான்றோன் எனக்கேட்டதாய்"

தன் மகனைப் பிறரால் கல்வி கேள்விகளில் சிறந்த நற்குணமுடையோன் எனச்சொல்லக் கேட்டதாய் தான் அவனைப்பெற்றெடுத்த காலத்தில் இருந்த சந்தோஷத்தைவிட பன்மடங்கு சந்தோஷமடைவாள் மகனைக் கேட்காமலே தெரிந்துகொள்வாள். மகனைப்பற்றிப் பிறர் சொல்லிக் கேட்டவிடேல் ஆனந்தம், ஏன்?

"ஈன்றாள் பசிகாண்பா ளாயினுஞ் செய்யற்க
சான்றோர் பழிக்கும் வினை"

தன்னைப் பெற்ற தாய் பசித்திருக்கத்தான் பார்த்திருக்கப் பெற்றாளானாலும் அப்பசி தீர்க்கவும் சான்றோர் பழிக்கும் தொழில் செய்யலாகாது. தாய் வறுமையால் பசி மிகுந்த காலத்திலும் தன் மகன் அப்பசியை நீககற்குங்கூடச் சான்றோர் பழிக்குந் தொழில் செய்வதைககேட்க வருந்துபவள்.

"மகன் தந்தைக்கு ஆற்றும் உதவி இவன் தந்தை
என்நோற்றான் கொல் எனுஞ் சொல்"

மகன் தந்தைக்குச் செய்யும் உதவி மகன் தன் அறிவு ஒழுக்கங் களினாலே தன்னைப்பார்த்தோர் இத்தகைய மகனைப்பெறுதற்கு இவன் தகப்பன் என்ன தவம் செய்தானோ எனக்கூறும்படி புகழ் தேட வேண்டும். இங்ஙனம் தந்தை செய்த உதவிக்கு மகன் பிரதி உபகாரத்தைச் செய்தல் வேண்டும்·

"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு

எந்த நன்றியை மறந்தாலும் பிழைப்பு உண்டு. ஒருவர் செய்த நன்றியை மறந்த மகனுக்கு பிழைப்பு இல்லை. எந்த நன்றியை மறந் தாலும் பிழைப்புண்டு மகனுக்கு தந்தை செய்த நன்றியை மறந்த வனுககுப் பிழைப்பு இல்லை. மகனுக்குத் தந்தை செய்யவேண்டிய நன்றியைச் செய்யாத தந்தைக்குப் பிழைப்பில்லை. ஆகையால் மகனுக்குச் செய்யவேண்டய நன்றியைத் தவறாமல் செய்யவேண்டும். மகன் தந்தைக்குச் செய்யவேண்டிய நன்றியைத் தவறாமல் செய்ய வேண்டும். இதிலும் தந்தையும் தாயும் செய்த உதவியை நினைத்து ஆண்மகன் பிரதி நன்றி செய்யாத காலத்தும் பெண்மக்கள் தாய் தந்தையர்க்கு உதவுவதைக் காண்க. எனவே மகனுக்கு வற்புறுத்தின்

கூறினர். தந்தை மகனுக்குக் கல்வி கற்றுக்கொடுக்கவேண்டும். மகன் கற்ற வழியில் நடக்கவேண்டும் என்பது தெளிவாகின்றது. அன்பர்களே!

இது கழகத்தின் இரண்டாவது வெளியீடு. அடுத்த வெளியீடு சித்திரை 1-ல் வருஷ விழாவோடு வெளியாகும். ஆண்டு விழாவுக்கு நமது தாலூக்காவின் அரிய புலவர்களோடு வெளியூர்களிலிருந்து அறிஞர்களையும் கூடுமானால் தேவார கோஷ்டியாரையும் வரவழைக்க எண்ணியிருக்கிறோம். இந்தன் முயற்சிக்கு அன்பர்களின் தாராளமான உதவி மிகவும் அவசியமானது. இவ்வருடம் கழகத்திற்கென ஒரு இடம் அமைக்கவேண்டும். எல்லோரும் இவ்விழாவில் கலந்துகொண்டு சிறப்பாக நடத்தி வைக்கப் பணிவுடன் கேட்டுக்கொள்ளுகிறேன்.

தா. வை. செல்லப்பன்,
காரியதரிசி,
திருவள்ளுவர் கழகம், தாரமங்கலம்.

